**கண்டி கடவத்ஸதர மற்றும் கங்கவட கோரளே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கண்டி கடவத்ஸதர மற்றும் கங்கவட கோரளே பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 2014 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த எனினும், உரிமை மாற்றப்பட்டிராத ரூபா 6,390,000 பெறுமதியான WPPF-7488 ஆம் இலக்க கப் வண்டியின் பெறுமதி கணக்கீட்டுப் பதிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையால் பராமரிக்கப்படும் காணிப் பதிவேட்டில் குறிப்பிடப்ப 19 காணிகள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதிருந்ததுடன் அக் காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் அப் பட்டோலையின் படி ரூபா 7,175,620 ஆகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களின் படி, இது ரூபா 7,282,002 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 106,382 தொகையான இணக்கமின்மையாகக் காணப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 124,549,528 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட

காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 75,048,169 ஆக காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 95,402,205 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,725,125 ஆகக் காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 8,906,670 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வண்டி மற்றும் வண்டிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 106,910 பெறுமதியான 04 சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதி | |
| | 217 | சபையிடம் உள்ள காணி கட்டிடங்களுக்காக பிரதேச சபை 46 படிவத்தின் படி ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | 218 | சகல காணி கட்டிடங்களும் வருடாந்தம் பரீட்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் (2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டது. | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்திற்கு மேற்பட்ட 48 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவை XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:4 ஆம் பிரிவு | ஊப தலைவர், திவி நெகும அபிவிருத்தி உத்தியோகத்தராக அவர் ஏற்றிருந்த பதவியில் இருக்கையில் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காகவும், அக் கூட்டம் மற்றும் இணைந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக சேவையின் அவசர தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு ஒரு மாதத்திற்கு 05 நாட்கள் சம்பளத்துடனான லீவு அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதிலும், லீவை அங்கீகரித்துக்கொள்ளாது சபைக்கு 13 தடவைகளும் குழுவிற்கு 26 தடவைகளும் கலந்துகொண்டிருந்தார். |
| (ஈ) | 2006 மே 31 ஆம் திகதிய மப/ப.பா.தெ./சலே. 2006/05 ஆம் இலக்க மத்திய மாகாண மாகாண சபை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | பிரதேச சபை உப தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனமும் எரிபொருளும் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிராத போது உப தலைவருக்கு ஓர் வாகனம் ஈடுபடுபத்தப்பட்டு இதற்கான எரிபொருள் வழங்கலுக்காக ரூபா 262,053 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 112,105,283 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 62,949,775 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 49,155,408 ஆலான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மிகை முன்னைய ஆண்டின் ஒட்டுமொத்த மிகையுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 16,089,325 தொகையான மிகையில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக 04 விடயங்களில் வருமானக் குறைவும் 02 விடயங்களின் செலவின அதிகரிப்பும் முக்கிய காரணமாகியிருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறானது நிலுவை மீதி | எதிர்காலப் பெறுவனவு | பட்டியல்படுத்தப்பட்டவை | 2015 ஆம் ஆண்டு மிகை அறவீடுகள் | வழங்கப்பட்ட கழிவு/பதி வழிப்புகள் | 2015 பெறுவனவு எதிர்காலப் பெறுவனவு | நிலுவை பெறுவனவு | 2015 பட்டியலிடப் பட்டவற்றில் பெறுவனவு | 2015.12.31 உள்ளவாறானது நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 8,214,097 | 369,281 | 7,514,256 | 474,465 | 299,153 | 510,266 | 2,711,245 | 4,321,219 | 7,991,653 |
| குத்தகை | 187,902 | -- | 564,000 | 5,700 | -- | -- | 187,407 | 428,700 | 141,495 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 2,854,699 | -- | -- | -- | -- | -- | 2,854,699 | -- |
| ஏனைய வருமானம் | 119,649,926 | -- | 45,092,884 | -- | 227,006 | 25,200 | 83,030,349 | 8,708,827 | 72,506,668 |
| **மொத்தம்** | | | | | | | | | **80,639,816** |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 80,639,816 தொகையான மொத்த வருமான நிலுவை காணப்பட்டது.

### 2.3.2 வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 8,199,083 தொகையான நிலுவை மீதி ஒன்று நிலவியதுடன், ஆண்டின் போது பட்டியலிடப்பட்டவை ரூபா 7,512,286 ஆகக் காணப்பட்டது. ஆண்டின் போது அறவீடுகள் நிலுவை மீதியில் 33 சதவீதமாகவும், ஆண்டிற்கான பட்டியலிடப்பட்டவை 57 சதவீதமாகவும் காணப்பட்டன. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா 7,975,099 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் 01 வருட காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட நிலுவை ரூபா 5,487,839 ஆகக் காணப்பட்டது. இதன் படி, வீத வரி அறவீடுகளில் நலிவான நிலை ஒன்று அவதானிக்கப்பட்டது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் தொகையில் ரூபா 6,358,828 தொகை கிடைக்கப்பெற உள்ளதாக செயலாளர் 2016 யூலை 27 ஆம் திகதியிட்டு எனக்கு அறிவித்திருந்தார்.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 62,143,620 தொகையும் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 690,918 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 36,220,448 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஒக்டோபர் 21 ஆம் திகதிய சீபீசீ/சீஎஸ்/05/14/01/18 ஆம் இலக்க மாகாண கணக்காய்வுப் பணிப்பாளரின் கணக்காய்வு அறிக்கையின் 05.02 இன் படி WP – LL – 6401 ஆம் இலக்க (Foton) லொறியின் எரிபொருள் பயன்பாட்டிற்கு மேலாகப் பெறப்பட்ட ரூபா 51,110 தொகையான 538 லீற்றர் டீசல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது கண்டி மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கு 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 20,000 தொகையான முற்பணத் தொகை 2015 நவம்பர் 03 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 ஆம் ஆண்டின் முன்பிருந்து நிலவிவரும் ஓய்வூதியப் பங்களிப்பிற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,803,483 தொகையான மீதி தீர்க்கப்படுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹீருஸ்ஸகல கிரீன் ஹீல்ஸ் காணியின் 59 ஆம் 41 ஆம் இலக்க தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் வீதி எல்லைகள் கருத்திற்கொள்ளப்படாது நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

(உ) 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 274,238 தொகையான 18 நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013, 2014 ஆம் 2015 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது 991 கட்டிட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், 677 மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 127 இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இதன் படி, அங்கீகரிக்கப்பட்ட 550 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படும் நடைமுறை செயற்பாட்டில் இருக்கவில்லை.

### 3.2 சிக்கனமற்ற செலவினங்கள்

**சீனாவில் நடாத்தப்பட்ட கல்விச் செயலமர்வு**

சபைத் தலைவர், உள்ளடங்கலாக 08 உறுப்பினர்கள் சீனாவில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொள்வதற்காக நிதியத்தில் ரூபா 1,280,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. சீனாவில் குவாங்சு நகர சபையின் அழைப்புக் கடிதத்தின் படி, 2015 மார்ச் 18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் ஓர் செயலமர்விற்காக அழைக்கப்பட்டிருக்கையில் கண்டி, குருதெனியவில் உள்ள அபிவிருத்தி நிறுவகம் ஒன்று 2015 மார்ச் 17 முதல் 29 வரையான தினங்களில் சுற்றுலாவிற்கு ஒழுங்கு செய்திருந்தது. எவ்வாறெனினும், 2015 மார்ச் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் 03 ஆம் திகதி வரையான 07 நாட்கள் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அச் செயலமர்வில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவைப் பயன்படுத்துவதற்கான ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சபைக் காணி குத்தகைக்கிடல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணியைக் கூறாக்கி விற்பனை செய்கையில் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஹிரிஸ்கல கிரீன் ஹில்ஸ் காணியின் 47.5 பேர்ச்

ரூபா 10,000 தொகையான வருடாந்த குத்தகைத் தொகைக்கு 05 ஆண்டுகளுக்கும் ஹந்தான டெஸ்லீன் ரேன்ஜ் இல் உள்ள 54 பேர்ச் காணியும் 53 பேர்ச் காணியும் 02 பகுதிகளாக ரூபா 12,000 ஆன வருடாந்த குத்தகைத் தொகைக்கு 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காணி உரிமையாளர்கள் இருவருக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (1996 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 935/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் (திருத்தப்பட்டது) வெளியிடப்பட்டவாறு) 22(1) ஆம் பிரிவிற்கு மாறாகவும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 19(1)(ஓ) ஆம் (ஒளை) ஆம் பிரிவின் படி, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது இக் காணி குத்தகைக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) முறையான மதிப்பீடு பெறப்படாதும் கேள்வி நடைமுறைக்கு மாறாகவும் சபைத் தலைவர் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் மூலம் குறித்த காணி குத்தகைக்கிடப்பட்டிருந்தது.

(இ) உரிய குத்தகை உடன்படிக்கையின் 05 ஆம் நிபந்தனையின் படி, காணியில் எந்தவித நிரந்தர உடன்படிக்கையும் நிர்மாணிக்கப்படலாகாத போதிலும், ஹீருஸ்ஸகல கிரீன் ஹில்ஸ் காணி குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட குத்தகையாளர் குத்தகைக் காணித் துண்டு பொருத்தும் வகையில் அவரது ஹொட்டேலில் ஒரு பகுதியை நிர்மாணித்திருந்ததுடன் காணியின் கீழ் எல்லைச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**3.4 வாகன கட்டுப்பாடு**

திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தராக கண்டி மாவட்டத்தில் கடமை புரியும் உப தலைவர் 2015 ஆம் ஆண்டின் போது லீவைப் பெற்றிருந்த 05 நாட்கள் தவிர்ந்த எஞ்சிய சகல நாட்களின் போதும் சபையின் சீபீபீட - 6533 ஆம் இலக்க கப் வண்டி பிரதேச சபை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமைக்கு ஓட்ட அட்டவணைகளில் கைச்சாத்திட்டு உரிய பயணம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலப்பகுதியின் போது சபை வாகனம் பல்வேறு பயணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு 2014 திசெம்பர் 15 ஆம் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது எரிபொருள், வாகனப் பழுதுபார்த்தல்கள், சாரதியின் சம்பளம் மற்றும் படிப்பணம் மற்றும் போக்குவரத்துச் செலவினத்திற்காக ரூபா 772,718 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அக் காலப்பகுதியின் போது வாகனம் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் சபையில் இருக்காததுடன் ஓட்ட அட்டவணைகளில் வாகனம் பயன்படுத்தப்பட்ட விதமும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் 177 மற்றும் 178 விதிமுறைகளிற்கு மாறாக முறையான கேள்வி நடைமுறை பின்பற்றப்படாது ரூபா 2,853,200 பெறுமதியான அலுவலக உபகரணம், கணனி, குளிரூட்டி மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) கதிரை கொள்வனவு செய்யப்படுகையில் உரிய பொருட்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டின் மூலம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், வேலை அதிகாரசபையால் பரீட்சிக்கப்பட்டு, தரம் தொடர்பாக நூற்றுக்கு நூறு வீதம் திருப்தியடைய முடியாதமை குறித்து எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டமை கருத்திற்கொள்ளப்படாது ரூபா 805,800 பெறுமதியான கதிரைகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

**3.6.1 குருதெனிய பிச்சமல்வத்த வீதியின் ஆற்றிற்குச் செல்லும் வடிகால் அபிவிருத்தி செய்தல் - ரூபா 100,000**

இத் துறையில் வடிகால்வாயின் පතුල 4 அங்குல தடிப்பமான மற்றும் 1:2:4 (19 மி.மி.) சீமேந்து, மண் மற்றும் கல் கலவையால் கொங்கிரீட் இட வேண்டிய போதிலும், 2015 நவம்பர் 06 ஆம் திகதி சில பகுதிகளில் உடைத்து பரீட்சிக்கையில் அந்த மண்ணின் தடிப்பு 2 அங்குலமாகவும் 2 1/2 அங்குலமாகவும் காணப்பட்டதுடன் கொங்கிரீட் எளிதாக உடையக் கூடிய நிலையில் நிலவிய மிகவும் குறைவான தரத்தில் நிர்மாணிப்பதற்காக ரூபா 100,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.6.2 குருதெனிய பிச்சமல்வத்த வீதியின் வடிகால் அபிவிருத்தி செய்தல் பிரிவு - ரூபா 250,000**

(i) இத் துறையில் வடிகால்வாயின் அடிப்பாகம் 4 அங்குல தடிப்பமான மற்றும் 1:2:4 (19 மி.மி.) சீமேந்து, மண் மற்றும் கல் கலவையால் கொங்கிரீட் இட வேண்டிய போதிலும், கொங்கிரீட் சில பகுதிகளில் உடைத்து பரீட்சிக்கையில் அந்த மண்ணின் தடிப்பு 2 அங்குலமாகக் காணப்பட்டதுடன் கொங்கிரீட் எளிதாக உடையக் கூடிய நிலையில் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) வடிகாலின் இறுதிப் பகுதியில் அடிப்பாகம் 100 - 150 வரையான பகுதியின் வடிகாலின் அடிப்பாகம் நிலத்திற்கு சமாந்தரமான நிலையில் உயரமாக நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக காணியின் அடிப்பாகத்தில் நீர் வழிந்தோடுவதற்கு முடியாது நிரம்பிக் காணப்பட்டது. இந் நிலையில் தரமாக அல்லாது நிர்மாணிப்பிற்காக ரூபா 250,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.6.3 உடதென்ன வீதியின் வடிகால் முறைமை அபிவிருத்தி - ரூபா 200,000**

இத் துறையின் வடிகால் அடிப்பகுதியில் 4 அங்குலத் தடிப்பில் நிர்மாணிக்கப்படுவதற்கு மதிப்பிட்டு அந்த அளவிற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 நவம்பர் 06 ஆம் திகதி சில பகுதிகளை உடைத்து பரீட்சிக்கையில் அடிப்பாகத்தில் 2 அங்குலத்திலேயே காணப்பட்டது. வடிகால் அடிப்பகுதிக்காக 1:2:4 (19 மி.மி.) சீமேந்து, மண் மற்றும் கல் கலவையால் கொங்கிரீட் இட வேண்டிய போதிலும், சில பகுதிகளில் உடைத்து பரீட்சிக்கையில் கொங்கிரீட் எளிதாக உடையக் கூடிய நிலையில் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதுடன் இவ் விதத்தில் தரமின்றி நிர்மாணிப்பதற்காக ரூபா 200,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.6.4 தேக்கவத்த வீதி அபிவிருத்தி ரூபா 400,000

---

(i) இத் துறை 275 அடி நீளமாக 4 அங்குலத் தடிப்பில் கொங்கிரீட் இடப்பட்டமைக்காக மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 நவம்பர் 06 ஆம் திகதி சில இடங்களில் உடைத்து பரீட்சிக்கையில் அத் தடிப்பு 3 1/2 அங்குலமாகக் காணப்பட்டது.

(ii) இவ் வீதி 1:2:4 (19 மி.மி.) சீமேந்து, மண் மற்றும் கல் கலவை இடப்பட்டு நிர்மாணிக்கப்படுவதற்காக மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதி சேதமாக்கப்பட்டு பரீட்சிக்கையில் கொங்கிரீட் மிகஎளிதாக உடையக் கூடிய நிலையில் காணப்பட்டது.

(iii) ஒட்டுமொத்தமாக நோக்குகையில் குறித்த தரத்திற்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பிற்காக ரூபா 399,203 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6.5 தென்னேகும்புர பன்சலவிற்கு அருகாமையில் உள்ளே செல்லும் வீதியின் பக்கச் சுவர் நிர்மாணிப்பு மற்றும் தென்னேகும்புர திரு. காமினி அவர்களின் வீட்டிற்கு அருகாமையில் செல்லும் வீதி நிர்மாணிப்பு - கட்டம் 02 - ரூபா 200,000

---

(i) 02 செயற்திட்டங்களுக்காக மதிப்பிட்டு, கோவைகள் பேணப்பட்டு ஒப்பந்த அமைப்புடன் வெவ்வேறாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இரு செயற்திட்டங்களின் மொத்த ஏற்பாடும் செலவிடப்பட்டு ஒரே இடத்தில் ஓர் பக்கச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) பிரதான வீதியில் இருந்து இவ் வீதி ஆரம்பமாகும் இடத்தில் உள்ள வீதியின் அகலம் 5 1/2 அடியாகவும் 7 1/2 அடியாகவும் காணப்பட்டதுடன் வீதியின் இரு மருங்கிலும் சுவர் கட்டப்பட்டு வீதியின் கரையிலேயே கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. ஆகையால், வாகனத்தில் பயணிக்கக்கூடியவாறு வீதியை அபிவிருத்தி செய்ய முடியாததன் காரணமாக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டது.

### 3.6.6 பிரதேச சபையின் புதிய கட்டிடத்தின் மேல் மாடி நிர்மாணிப்பு

---

பிரதேச சபையின் புதிய கட்டிடத்தின் மேல் மாடி நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு கேள்வி வழங்கப்படாது, நிதிக் குழுவால் இரண்டாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு கேள்வி வழங்கப்பட்டதன் மூலம் சபைக்கு ரூபா 1,351,777 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.6.7 தல்வத்த ஹிட்டிநாகவத்த வீதி அபிவிருத்தி - ரூபா 240,131

---

தல்வத்த ஹிட்டிநாகவத்த வீதி அபிவிருத்தி செய்யப்படுவது மாகாண குறித்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 250,000 தொகையான மதிப்பீட்டின் கீழ் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 240,131 தொகை 2014 திசெம்பர் மாதம் செலுத்தப்பட்டிருந்தது. கொங்கிரீட் இடப்பட்டு வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த இவ் வீதியின் பகுதிகள் முற்றாக கழற்றி அகற்றப்பட்டிருந்தமை 2015 நவம்பர் 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் வீதியின் கொங்கிரீட் அகற்றப்பட்டமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் உக்கலடையாத பொருட்களைக் கொள்வனவு செய்யும் முறைமை ஒன்று செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) முன்னைய ஆண்டின் போது, அபிவிருத்தித் தீர்மானங்களைப் பெற்று முன்னுரிமை தயாரிக்கப்பட்டு, எதிர்வரும் ஆண்டுகளின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக முறையான வகையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் இருந்து மதிப்பீடு பெறப்பட்டு அம் மதிப்பீட்டுப் பெறுமதியின் படி, பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 207 கைத்தொழில்களுக்காக நிதி பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தித் தீர்மானம் செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 6,500,000 தொகையான மொத்தப் பெறுமதியுடன் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 47 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,813,264 தொகையான ஏற்பாட்டில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாது மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 13 வருமான விடயங்களிற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 2,429,000 தொகையான வருமானம் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 31 வருமான விடயங்களில் 22 சதவீதத்தில் இருந்து 136.8 சதவீதம் வரையிலும், 43 செலவின விடயங்களில் 17 சதவீதத்தில் இருந்து 99 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் காரணியாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டு உள்ளடக்கப்படும் வகையில் கூட்டிணைந்த திட்டமும் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் ஒப்படைக்கப்பட்டிருந்த காரணத்தால் நிறுவகத்தில் போதுமானதும் சுதந்திரமானதுமான உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) சபையிடம் உள்ள வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக குறைவான பயன்பாட்டுடன் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 1,625,000 பெறுமதியான 02 வாகனங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக விளைவற்று சபை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

(iii) துணைப் பங்கீடு செய்யப்பட்ட காணியின் பொது வசதிக்காக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த காணிகள் எதுவும் அபிவிருத்தி மற்றும் வேலி எல்லை தயாரிக்கப்படாது புதர்கள் வளர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்